பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 24 திங்கட்கிழமை 07.04.2025 கதிர் 150

## இனி அது ரகசியம் அல்ல!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று இலங்கைக்கான தனது பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பினார். டில்லிக்குத் திரும்புகிற வழியில் தமிழ்நாட்டின் பாம்பன் ☞2

# அ’புர மகா போதியில் மோடி நேற்று வழிபாடு

நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் அநுராதபுரத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஜயஸ்ரீ மகா போதியில் வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றார். உடமலுவவை சென்றடைந்த இந்தியப் பிரதமர், அட்டமஸ்தானாதிபதி நுவரகலாவியே பிரதான சங்கநாயக்க பல்லேகம ஹேமரதன நாயக்க தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.









தனது அநுராதபுர பயணம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பிரதமர் மோடி, ”அநுராதபுரத்தில் உள்ள ஜய ஸ்ரீமகா போதியில் ஜனாதிபதியுடன் ☞8

வெலிக்கடையில் கைதி காவலில் இறந்ததால்

## பொலிஸ் பொறுப்பதிகாரியை பதவி நீக்குமாறு பரிந்துரை

வெலிக்கடை பொலிஸ் காவலில் இருந்த போது சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை பதவி நீக்கம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, பதில் பொலிஸ்மா அதிபரினால் குறித்த பரிந்துரைகள் தேசிய பொலிஸ் ஆணையத்திடம் சமர்ப்பிப்பதற்காக பதில் பொலிஸ் மா அதிபர் நேற்று பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த சம்பவத்தில் கடமை தவறினார் ☞2

## இலங்கையர்களின் அன்புக்கு நன்றி கூறிய இந்தியப் பிரதமர்

இலங்கைக்கான பயணத்தின் போதான அன்பான அரவணைப்புக்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மக்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார். ☞2

# பொருளாதார சுனாமியைவிட பாரதூரமானது அமெரிக்க வரி

### சஜித் பிரேமதாச எச்சரிக்கை

நாடு வங்குரோத்தடைந்த நிலையால் ஏற்பட்ட பொருளாதார சுனாமியை நாடாக நாம் எதிர்கொண்டோம். அதைவிடப் பாரதூரமான பொருளாதார சுனாமி தற்போது ஏற்படப் போகிறது. ட்ரம்ப் விதித்துள்ள வரி அதிகரிப்பால் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எச்சரித்துள்ளார்.

புத்தளம் வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டு நாடு வங்குரோத் தடைந்த நிலையால் ஏற்பட்ட பொருளாதார சுனாமியை நாடாக நாம் எதிர்கொண்டோம். அதைவிடப் பாரதூரமான பொருளாதார சுனாமி தற்போது ஏற்படப் போகிறது. அன்று உருவெடுத்த வரிசை யுகத்தினால் அமைதியின்மை, இடர்பாடுகள் போன்றவற்றால் மக்கள் பல ☞2

## தேர்தல் பதாகைகளை அகற்ற 2 ஆயிரம் பேர்

தேர்தல் பதாகைகளை அகற்றுவதற்காக 2,000 பேர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான பொலிஸ் தலைமையகத்திற்கு நால்வர் என்ற அடிப்படையில் ஈடுபடுத்தப்படுத் தப்படவுள்ளனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் ☞2

## ஆளும்தரப்பு இளம் எம்.பி. திடீர் உயிரிழப்பு

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கோசல நுவன் காலமாகியுள்ளார். திடீரென அவருக்கு ஏற்பட்டுள்ள இருதய நோய் காரணமாக கரவனெல்ல ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலே அவர் நேற்று உயிரிழந்தார்.

இறக்கும்போது அவருக்கு வயது 38. கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர் கோசல நுவன் தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியில் உறுப்பினராக இந்த முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருந்தார்.

# ஜி.எஸ்.பி. வரிச் சலுகையும் பறிபோகும் ஆபத்து உண்டு

### ஹர்ஷ டி சில்வா எம்.பி. எதிர்வுகூறல்

அமெரிக்காவினால் கதவுகள் அடைக்கப்படும்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும். ஐரோப்பிய நாடாளுமன்றத்தினால் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டத்துடன் புதிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரவுள்ளது. அதற்கமைய தற்போது ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைக்கப் பெறும் சுமார் 6 நாடுகள் அதனை இழக்க நேரிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ☞2

## தபால் ஊழியர்களின் விடுமுறை நிறுத்தம்

அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு பணிகளுக்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நிறைவடையும் வரை விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதி தபால் மாஅதிபர் பிரேமச்சந்திர ஹேரத் தெரிவித்தார். ☞8

## தம்புள்ள மரக்கறி களஞ்சியம்போன்றே யாழ்ப்பாணத்திலும் ஒன்று வேண்டும்

### ஹர்ஷ டி சில்வா ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய பிரதமர் மற்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் இணைந்து திறக்கப்பட்ட வெப்பநிலை கட்டுப்பாட்டு களஞ்சியமான தம்புள்ளையின் விவசாய களஞ்சியம் போன்று யாழ்ப்பாணத்திலும் ஒரு களஞ்சியத்தை ஆளும்தரப்பு உருவாக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் ☞8

## அமெரிக்காவின் புதிய வரியால் ஆடைத்துறைக்கே கடும் பாதிப்பு

நாட்டின் பெரும்பாலான ஏற்றுமதிகள் ஆடைத் துறையில் தங்கி இருப்பதால், அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக் கொள்கையால் நாட்டின் ஆடைத் தொழில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகும் என தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக் கொள்கை இலங்கையை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். ☞8

## நீர்கொழும்பு வைத்தியசாலையிலும் பெண் மீது பாலியல் வன்கொடுமை

நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் இளம் பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாக நீர்கொழும்பு பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மார்ச் 31, பல்வலி மற்றும் தோல் நோய்க்கு சிகிச்சை பெற தனது தாயுடன் நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு வந்த இளம் பெண், தன்னை பரிசோதித்த வைத்தியர் தம்மை ☞8

## இனி இது .....

பாலத்தையும் அவர் திறந்து வைத்தார்.

இராமேஸ்வரம் தீவை இந்திய பெருநிலப் பரப்புடன் இணைக்கும் பாலம் இந்தப் பாம்பன். கடலின் நடுவே கப்பல்கள் கடந்து செல்வதற்குஏற்றவசதியுடன்நீண்டதூரத்திற்கு அமைக்கப்பட்ட வீதி இந்தப் பாலம்.

அநுராதபுரத்திலிருந்து புறப்பட்ட மோடி நேராக இராமேஸ்வரம் சென்று பாலத்தைத் திறந்து வைத்தார். இராமேஸ்வரம் செல்லும் வழியில் அவர் இராமர் – சேது பாலத்தையும் வான் வழியாகப் பார்வையிட்டபடி சென்றார் என்று செய்திகள் வந்திருக்கின்றன. பிரதமர் மோடியின் ஊடகப் பிரிவினரால் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத்தைப் பார்வையிட்ட தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட பிரதமர் மோடி,

'இலங்கையிலிருந்து திரும்பும் வழியில், ராமர் சேதுவைப் பார்க்கும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது. தெய்வீக தற்செயலாக, அயோத்தியில் சூரிய திலக விழா நடைபெற்ற அதேநேரத்தில் அது நடந்தது. இரண்டையும் பார்ப்பது ஒரு பாக்கியம். பகவான் ஸ்ரீ ராமர் நம் அனைவரையும் ஒன்றிணைக்கும் சக்தி. அவரது ஆசீர்வாதம் எப்போதும் நம் மீது இருக்கும்' என்றார் மோடி.

மோடியின் கருத்து வெளிப்படைக்கு ஆன்மீக ரீதியானதாக இருந்தாலும் அது- ஆழமான அரசியல் அர்த்தங்களைக் கொண்டது என்று சிலர் சொல்கின்றார்கள்.

இலங்கையிலிருந்து மோடி இந்தியா திரும்பும்போது பாம்பன் பாலத்தைத் திறந்து வைத்தமையும் சேது சமுத்திரத்தை, அதாவது இலங்கைக்கு இராமரும் அவரது படையினரும் வருவதற்கு ஏதுவாக அவரது வானரப் படைகள் கட்டியதாக ஐதீகக் கதைகள் கூறும் சேது சமுத்திரப் பாலத்தைப் பார்வையிட்டதும் அரசியல் ரீதியானவை என்பது அவர்களின் பார்வை.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஒரு பாலம் அமைக்கப்பட்டால் அது இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையிலானதாகத்தான் இருக்கும். பாம்பனில் அமைந்துள்ள புதிய பாலம் என்பது இலங்கைக்கும் இந்தியாவிற்குமான பாலத்தின் இந்தியப் பக்கத்தின் கடைசித் தரிப்பிடம். இலங்கையிலிருந்து நேரே சென்று அதைத் திறந்திருப்பதன் மூலம் இலங்கைக்கு பாலம் அமைக்கத் இந்தியா தயாராக இருக்கின்றது என்கிற செய்தியைச் சொல்வதுடன், சேது சமுத்திரத்தைப் பார்வையிட்டிருப்பதன் மூலம் இலங்கைக்கான பாலம் குறித்த தனது கனவையும் மோடி வெளிப்படுத்தியுள்ளார் என்று அவர்கள் விளக்கமும் சொல்கிறார்கள்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது குறித்து ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் பேச்சுக்கள் இடம்பெற்றன. அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராயப்பட்டன. எனினும் புதிய ஆளும்தரப்பின் கீழ் இந்தப் பாலத்தின் மீது அதிகம் அக்கறை காட்டப்படவில்லை. அதனாலேயே மோடி 'சிபாலிக்காக' இலங்கையிலிருந்து திரும்பும் வழியை அநுரவுக்கு இலங்கைக்கான பாலத்தை நினைவுபடுத்தும் விதத்தில் அமைத்துக்கொண்டார் என்றும் சொல்கிறார்கள்.

அமெரிக்காவின் வரிச் சவால், ஜி.எஸ்.பி. வரிச் சலுகை கிடைக்குமா இல்லையா என்பது தெரியாத நிலை என்று மேலும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையில் உள்ள இலங்கைக்கு இந்தியாதான் இப்போதைக்கு ஆபத்தாந்தவன். ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்பையே தனது அரசியல் கொள்கையாகக் கொண்டிருந்த ஜேவிபியின் முதுகெலும்புடன் ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அரசுத் தலைவரான அநுரகுமார, இந்தியப் பிரதமருக்கு இலங்கையின் அதியுயர் விருதை வழங்கி மகிழும் நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான பாலமும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் கீழ் சாத்தியமில்லாதது என்று சொல்லிவிட முடியாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னல்களை அனுபவித்தனர். இம்முறை அதைவிடப் பாரதூரமான ஆபத்தான பொருளாதார நிலைமை உருவெடுத்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் நமது நாட்டின் ஏற்றுமதிகள் மீது 44 சதவீத பரஸ்பர வரி விதித்துள்ளது. நமது நாடு அமெரிக்க இறக்குமதிப் பொருட்களுக்கு 88 சதவீத வரி விதித்தமையே இதற்குக்காரணமாகும். இந்தப் பிரச்சினையால், அமெரிக்காவுக்காவுக்கான நமதுநாட்டின்ஏற்றுமதியும், அந்தஏற்றுமதியை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் கடும் சிக்கலை எதிர்கொள்கின்றன.

இந்த வரி விதிப்பால் நமது நாட்டுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். நமது நாட்டின் 40 சதவீத ஆடைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகின்றன. இது தடைபடலாம். இந்த வரி ஏப்ரல் 9 முதல் அமுலுக்கு வருகிறது. இதுபோன்ற வரி உலகின் பல நாடுகளுக்கும் விதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே ஆளும்தரப்பிடம் இது குறித்துச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இலங்கை ஆளும்தரப்பு சர்வதேச வர்த்தகத் துறையைப் பற்றி நன்கு அறிந்த ஒரு குழுவை வொஷிங்டனுக்கு அனுப்பி உரிய தரப்புகளுடன் கலந்துரையாடலை முன்னெடுக்குமாறு நாம் தொடர்ச்சியாக கோரிக்கைவிடுத்தோம். ஆனால் ஆளும்தரப்பு இதனை புறக்கணித்து, ஆணவம் காட்டி வருகிறது. இந்த வரி விதிப்பால் நமது நாட்டின் ஆடைத் தொழில் ஏற்றுமதியில் 40 சதவீதம் அமெரிக்கச் சந்தை வாய்ப்பை இழக்க நேரிடும்.

இதனால், தொழிற்சாலைகளில் உற்பத்திகள் குறைவடையும். தொழிற்சாலைகளில் பணிபுரியும் பல தொழிலாளர்களுக்கு தமது தொழில்களும் இல்லாது போகலாம். அந்நியச் செலாவணி குறைந்து, பொருளாதார வளர்ச்சி விகிதத்தை கடுமையாகப் பாதிக்கும். இதனால் 2028ஆம் ஆண்டு முதல் மீண்டும் கடனை செலுத்துவதில் சிக்கல் ஏற்படும்.

2033ஆம் ஆண்டு முதல் கடனை செலுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் கோரியிருந்த வேளையில், இல்லை நாம் 2028ஆம் ஆண்டிலிருந்தே கடனை செலுத்துகிறோம் என முன்னைய ஆளும்தரப்பு தீர்மானித்தது. முன்னைய ஆளும்தரப்பு முற்றிலும் தவறு செய்துள்ளது.

நாம் இவற்றைச் சுட்டிக்காட்டி எதிர்வு கூறியபோது எம்மை பார்த்து ஆளுந்தரப்பினர் பரிகசித்தனர். நாம் சொன்னதை செய்திருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது. ஐக்கிய மக்கள் சக்தி சொன்னதைச் செய்திருந்தால், குறைந்தபட்சம் ஒரு ஆரம்ப மட்ட கலந்துரையாடலையாவது இதுவரையில் நடத்தியிருக்கலாம்.

இப்போது மாற்றுத் திட்டத்துடன் அமெரிக்காவுக்கு தூதுக்குழுவை அனுப்ப வேண்டும். இதனால் பாதிக்கப்படும் ஆசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் சேர்ந்து, பொதுவான ஒப்பந்தத்தின் கீழ் உலக வர்த்தக ஸ்தாபனத்துடன் இணைந்து ஏதாவது திட்டத்தை முன்னெடுக்கவேண்டும். அதுமட்டுமின்றி இது தொடர்பில் நாட்டுக்குள் பொதுவான ஒருமித்த கருத்தை எட்டவேண்டும்.

மேலும், நமது நாட்டின் ஏற்றுமதிச் சந்தையை ஏனைய நாடுகளுக்கு விரிவுபடுத்தவேண்டும். ஏற்றுமதியாளர்களுக்குப் பலம் தரும் பிரத்தியேக நிதியமொன்றை நிறுவி, பசுமைப் பொருளாதாரத்தை நோக்கிப் பயணிக்கவேண்டும். வாக்குறுதியளித்த எரிபொருள் மானியம், எண்ணெய் மானியம், விவசாயிகளுக்கான உர மானியம் என்பனவற்றை ஆளும்தரப்பு இதுவரையில் வழங்கவில்லை. நமது நாட்டிற்குப் பணம் அனுப்பும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான தெளிவான திட்டமொன்றும் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அவர்களின் வாக்குகளைப் பெற்றனர். ஆனால் அவர்களுக்கான நலன்பேணும் திட்டங்கள் இல்லை.

அதுமட்டுமின்றி, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் மீது மார்ச் 31க்குப் பிறகு மீண்டும் பராட்டே சட்டத்தை அமுல்படுத்தப்போகின்றனர். முப்பெரும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்த இந்த தொழில்முயற்சியாளர்களின் வியாபார தலங்கள், சொத்துக்கள், நிறுவனங்கள் மீண்டும் ஏலத்தில் விடப்பட போகிறன.

ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ச்சியாக இந்த சட்டத்தை இடைநிறுத்துவதற்கு நிர்பந்தித்தது. இதன் பயனாக கடந்த அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் தற்காலிகமாக இந்த பராட்டே சட்டத்தை இடைநிறுத்திய போதிலும், இந்த வியாபார முயற்சிகளை கட்டியெழுப்ப இரண்டு ஆளும்தரப்புகளும் எந்த சலுகைகளையும் இவர்களுக்கு வழங்கவில்லை என்றார்.

## இலங்கையர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ பயணமாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு பிரதமர் மோடி இலங்கைக்கு வருகை தந்திருந்தார். பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நாடு திரும்பினார். இந்நிலையில் தனது இலங்கைப் பயணம் தொடர்பில் செய்திருந்த எக்ஸ் பதிவிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

'கொழும்புக்கான பயணமாக இருந்தாலும் சரி, அநுராதபுரத்துக்கான பயணமாக இருந்தாலும் சரி இரண்டுமே நமது இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான கலாசார, ஆன்மீக மற்றும் நாகரீக உறவுகளை மீள உறுதிப்படுத்துவதாகவே அமைந்தன. இந்தப் பயணம் நமது இருதரப்பு உறவுகளுக்கு நிச்சயமாக உத்வேகத்தை தரும்'' என பிரதமர் மோடி அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் 'நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு' என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய பிரதமர் இலங்கைக்கு அரச பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தந்த நான்காவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இந்திய அரசின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் இந்த பயணத்தில் கலந்துகொண்டிருந்தது

## தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

ஏனைய பொலிஸ் நிலையங்களுக்காக மூவரும் கிராமிய மட்ட பொலிஸ் நிலையங்களுக்காக இருவரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மே 8 வரை அமுலாகும் வகையில் தற்காலிக அடிப்படையில் இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் உள்ள 607 பொலிஸ் நிலையங்களில் 605 பொலிஸ் நிலையங்களுக்கு இவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என அடையாளம் காணப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரின் சேவைகளை இடைநிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி இரவு, நாவல பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்குள் நுழைந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். பின்னர் பொலிஸ் காவலில் இருக்கும்போதே ஒழுங்கீனமான நடத்தை காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அங்கு அந்த இளைஞர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

## நீர்கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலியல் வன்கொடுமை செய்தார் என்று நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மூலம் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்திருந்தார்.

அதன்படி, குறித்த இளம் பெண்ணை ஏப்ரல் 2 சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அங்கு வழங்கப்பட்ட வைத்திய அறிக்கையில் குறித்த இளம் பெண் திருப்தி அடையவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக பாதிக்கப்பட்டவரை விசேட மருத்துவ குழுவால் பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், இந்த சம்பவம் தொடர்பாக அரசு வைத்திய அதிகாரிகள் சங்கமும் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய வைத்தியர், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தனது கடிதத்தில், பல ஆண்டுகளுக்கு முன்பும் சங்கத்தின் யாப்பை மீறியதற்காக, அவரை சங்கத்திலிருந்து நீக்கியிருந்ததாக குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், அரசு வைத்தியசாலையில் நடந்த இந்த கடுமையான சம்பவம் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட்டு, சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தி குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட விசாரணைகளுக்கு தமது உச்சபட்ச ஆதரவை சங்கம் வழங்கும் என்றும், சுகாதார சேவையில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்திலும் பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று தமது சங்கம் நம்புகிறது என்றும், எதிர்காலத்தில் ஒரு வலுவான கொள்கை மற்றும் திட்டத்தை நிறுவுவதற்குத் தேவையான தலைமையை வழங்க சங்கம் தயாராக உள்ளது என்றும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அநுராதபுரம் வைத்தியசாலையில் பெண் மருத்துவர் மீது பாலியல் வன்கொடுமை இடம்பெற்றமை இலங்கையில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

## ஜி.எஸ்.பி. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பயணம் மற்றும் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வுகளில் கேள்வியெழுப்ப எதிர்பார்க்கின்றோம். கைசாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் தெரிந்து கொள்வதற்கான உரிமை சகலருக்குமுள்ளது.

இந்திய பரவாலக்கத்தை கடுமையாக எதிர்த்த குழுவொன்று இன்று இந்திய பிரதமருக்கு பிரம்மாண்ட வரவேற்பளித்து அவருக்கு இலங்கையில் வழங்கப்படும் அதியுயர் கௌரவ நாமத்தையும் வழங்கியிருக்கின்றமை உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. இலங்கைக்கு மிக அருகிலுள்ள பெரும் பொருளாதாரச் சக்தி இந்தியாவாகும்.

தென்னிந்தியாவின் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் ஆந்ரா ஆகிய மாநிலங்கள் அடுத்த தசாப்தத்தில் உலகில் மிக வேகமாக அபிவிருத்தியடையும் வலயமாக அமையும். இவற்றின் இந்த துரித அபிவிருத்தியில் பயன்பெறுவதற்கு எமக்கு சிறந்த வாய்ப்பிருக்கிறது. எவ்வாறிருப்பினும் அதற்கான முன்னெடுப்புக்களுக்கு எமது சிந்தனையை மாற்றிக் கொள்ளவேண்டும்.

இந்த ஆளும்தரப்பு ஆட்சியமைத்திலிருந்து சுவர்களை உடைத்து, பாலங்களை அமைக்குமாறு நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றேன். அவ்வாறு சுவர்களை உடைத்து, பாலங்களை அமைத்தவர்களுக்கு அமெரிக்காவால் தடை விதிக்கப்படவில்லை. மாறாக பாலங்களை உடைத்து சுவர்களை அமைத்தவர்களுக்கு தடையிருக்கிறது. இதன் மூலம் நாம் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

வருடாந்தம் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களுக்கு அரச குழுவொன்று செல்வது வழமையாகும். இதன்போது அமெரிக்காவின் வரி குறித்து பேசப்படப் போகிறதா என்பது எமக்குத் தெரியாது. நாணய நிதியத்திலிருப்பதால் எமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரினால் அதனை ஏற்கக் கூடியவரல்லர் ட்ரம்ப்.

வியட்நாம் ட்ரம்பிடம் முன்மொழிந்துள்ளதைப் போன்று அசாதாரணமான வாய்ப்பொன்றை வழங்கினால் வரி குறைப்பு குறித்து சிந்திக்க முடியும் என்று அமெரிக்கா கூறுகிறது. அவ்வாறெனில் அந்த அசாதாரணமான வாய்ப்பு என்ன என்பது குறித்து ஆளும்தரப்பும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சும் தீர்மானிக்க வேண்டும்.

பிராந்திய பொருளாதார ஒப்பந்தங்களுக்குச் செல்லாமல் நாட்டுக்கு தேவையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது. சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எம்மால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் ப்ளு பிரின்ட் வெளியீட்டில் இது தொடர்பில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# முல்லைத்தீவில் பெரும்பான்மையினர் அத்துமீறி மீன் வாடி அமைக்க முயற்சி

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில், புலிபாய்ந்தகல் பகுதியில் அமைந்துள்ள தமிழ் மீனவர்களின் சில வாடிகளை அடாவடித்தனமாக அகற்றிவிட்டு, அந்த இடத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையின மீனவர்கள் அத்துமீறி வாடி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.





இந் நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வெள்ளிக்கிழமை குறித்த பகுதிக்கு நேரடியாகச்சென்று நிலமைகளைப் பார்வையிட்டதுடன், உரிய தரப்பினரோடு தொடர்புகொண்டு கலந்துரையாடி தென்னிலங்கை பெரும்பான்மையின மீனவர்களால் அத்துமீறி அமைக்கப்பட்ட வாடிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.



இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

தமிழ்மீனவர்கள்பன்நெடுங்காலமாக மீன்பிடியில்ஈடுபட்டுவரும்முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் புலிபாய்ந்தகல் பகுதியை ஆக்கிரமித்து அங்கு வாடி அமைப்பதற்கு பெரும்பான்மையின மீனவர்கள் தொடர்ந்து முனைப்புக்காட்டிவருகின்றனர்.

அந்தவகையில் கடந்த வருடமும் அத்துமீறி குறித்த பகுதியில் வாடி அமைப்பதற்கு சில பெரும்பான்மையின மீனவர்கள் முயற்சி மேற்கொண்டிருந்தனர்.இந்நிலையில் அப்பகுதி மீனவர்கள் மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் இணைந்து குறித்த அத்துமீறல் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இத்தகைய சூழலில் மீளவும், கடந்த சில நாள்களுக்கு முன்பதாக குறித்த புலிபாய்ந்தகல் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த சில பெரும்பான்மையின மீனவர்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில்நீரியல்வளத்திணைக்களத்திடமோ, கரைதுறைப்பற்று பிரதேசசெயலககாணிப்பிரிவிடமோ எவ்வித அனுமதிகளையும் பெறாது அத்துமீறி வாடிகளை அமைத்துள்ளனர்.

அத்தோடு புலிபாய்ந்தகல் பகுதியில் பூர்வீகமாக மீன்பிடியில் ஈடுபடும் சில தமிழ் மீனவர்களின் வாடிகளை அடாவடித்தனமாக அகற்றியேஇவ்வாறுதென்னிலங்கை பெரும்பான்மையினமீனவர்களால் வாடி அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மீன்பிடிப் படகொன்றும் அனுமதி பெறப்படாமல் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கொக்குத்தொடுவாய்கடற்றொழிலாளர்சங்கத்தின் அழைப்பை ஏற்று அப்பகுதிக்குச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்துரைராசாரவிகரன் நிலைமைகளைப் பார்வையிட்டதுடன்,அப்பகுதியில்பெரும்பான்மையின தென்னிலங்கை மீனவர்களால்அத்துமீறிவாடிஅமைக்கப்பட்டமைதொடர்பில் கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியதுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

அதேவேளை கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலரையும் உடனடியாக குறித்த இடத்திற்கு அழைத்து நிலமைகளைக் காண்பித்ததுடன் அவரிடமும் இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.மோகனகுமாருடனும் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தி, அனுமதியின்றி கரையே நிறுத்திவைக்கப்பட்டுள்ள படகு தொடர்பிலும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் குறித்த பகுதியில் அனுமதிகள் எவையும் பெறப்படாமல் அத்துமீறி அடாவடியாக தென்னிலங்கை மீனவர்களால் அமைக்கப்பட்டுள்ள வாடிகளை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறு கரைதுறைப்பற்று பிரதேசசெயலகக் காணிப் பிரிவால் அப்பகுதியில் துண்டுப்பிரசுரம் காட்சிப்படுத்தப்படுமென கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணி உத்தியோகத்தரால் நாடாளுமன்றஉறுப்பினரிடம்தெரிவிக்கப்பட்டதுடன், கொக்குத்தொடுவாய் கிராம அலுவலரும் இது தொடர்பில் உரிய இடங்களுக்கு தாம் தெரியப்படுத்துவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார்.

அத்தோடு அனுமதி பெறப்படாது கரையே நிறுத்திவைக்கப்பட்டுள்ள குறித்த படகு தொடர்பில் தம்மால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் க.மோகனகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் தெரிவித்திருந்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் -

கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய மூன்று கிராமங்களிலும் வாழும் தமிழ் மக்களின் ஒரேயொரு மீன்பிடித்துறையாக இந்த புலிபாய்ந்தகல் பகுதியே காணப்படுகின்றது.

இந்நிலையில் அந்த மக்களின் வாழ்வாதாரத்தை சூறையாடும்வகையில்தொடர்ச்சியாகஇடம்பெற்று வரும் இத்தகைய அத்துமீறல், அடாவடித்தனமான முயற்சிகளை தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. ஓரளவிற்குத்தான் நாமும் பொறுமையாக இருக்கமுடியும். - என்றார்.

இதன்போது கொக்குத்தொடுவாய் கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் ந.மதியழகன், தமிழரசுக்கட்சியின் கரைதுறைப்பற்று பிரதேச உபசெயலாளர் கி.சிவகுரு ஆகியோரும் குறித்த இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இறக்காமம் பிரதேச சபையில் புதிய வருமான மூலங்களை நாங்கள் உருவாக்குவோமாம்

### தலைமை வேட்பாளர் சமீம் உறுதி

(நூருல் ஹுதா உமர்)



அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச சபைக்கு கால்பந்து சின்னத்தில் சுயேச்சையாக போட்டியிடும் கே.எல். சமீம் தலைமையிலான அணியின் தேர்தல் செயற்பாட்டு காரியாலயம் நேற்று இறக்காமத்தில் தலைமை வேட்பாளர் கே.எல். சமீம் அவர்களால் வேட்பாளர்கள் புடைசூழ திறந்து வைக்கப்பட்டது.

காரியாலயம் திறப்பு விழாவை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தலைமை வேட்பாளர் கே.எல். சமீம் -

கால்பந்து சின்னத்திற்கு இறக்காமத்தின் 10 வாக்களிப்பு நிலையங்களிலும் 3000 வாக்குகள் பெற்று போனஸ் உட்பட 7 ஆசனங்கள் பெற 'வட்டாரம் தாண்டிய' என்ற பற்றுறுதி அனைத்து வேட்பாளர்களாலும் இன்று வெளிப்பட்டது.

கால்பந்து சின்னத்தின் மத்திய தேர்தல் காரியாலயம் இன்று அனைத்து வேட்பாளார்கள் சகிதம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு வேட்பாளரும் தங்கள் மனதில் தோன்றிய ஆக்க பூர்வமான கருத்துக்களையும் முன் வைத்தனர் அவர்களின் ஆலோசனைகளையும் செயற்படுத்த உள்ளோம்.

மாற்றுக் கட்சிக்காரரர் சபையைக் கைப்பற்றினால் நிதி பெற முடியாது என ஆளும் தரப்பினர் பிரசாரம் செய்கிறார்கள். இது பொய்.

ஒரு பிரதேச சபைக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் காலத்திற்குக் காலம் அல்லது வருடா வருடம் ஒதுக்கப்படும் மாகாண கட்டுறுத்து நிதி, அதைப்போலவே அலுவலக மற்றும் நிர்வாக விஸ்தரிப்புக்கு பயன்படுத்தக்கூடிய நிதி, இந்த இரண்டு நிதிகளும் தவிர இன்னும் பல வருமான மூலங்கள் உள்ளன. இறக்காமம் பிரதேச சபையில் புதிய வருமான வழிகளை நாங்கள் உருவாக்குவோம். மக்கள் போலிப்பிரசாரங்களை நம்பி ஏமாற வேண்டாம். - என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நுண் நிதிக் கடன் அவலம் மீது அவதானம் வேண்டும்

இலங்கையில் அளவு கணக்கற்ற வகையில் பெருகிய நுண்கடன் நிதி நிறுவனங்களால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தேர்தல் காலம் வரையில் மிகப் பாரதூரமானதாக இருந்த வந்த நிலையில், இப்போது அதன் மீதான கவனம் குறைந்துள்ளதாகப்படுகின்றது.

லட்சக்கணக்கான இலங்கையர்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள பெண்கள், கட்டுப்பாடற்ற நுண்நிதி நடைமுறைகளால் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். சண்டை, தற்கொலை மற்றும் வறுமைக்கு வழிவகுத்த இந்தக் கடன் சுழற்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தொடர்ச்சியாக அழைப்பு விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் ஆளும்தரப்புக்கள் இதனைக் கண்டுகொள்ளாத நிலையே தொடர்கின்றது. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியிலும் இந்த நிலையில் மாற்றமில்லை.

வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் இந்த நுண் கடன் சுமையால் பெருதும் பாதிக்கப்பட்டுள்ளன தேர்தல் காலத்தில் பரப்புரை மேடைகளில் இந்தப் பிரச்சினையும் முக்கியமான இடம்பிடித்திருந்தது. இதற்குத் தீர்வு தரப்பும் என்று ஆளாளுக்கு உறுதிமொழி வழங்கியிருந்தனர். ஆயினும்கூட, ஆளும்தரப்பு இந்தப் பிரச்சினை தொடர்பாக மிகக் குறைந்த நடவடிக்கையே எடுத்திருக்கின்றது அல்லது உறுதியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

நுண்நிதி நிறுவனங்கள் தொடர்ந்து விரிவடைந்து வருவதால், குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், கிராமப்புற சமூகங்கள் இவற்றால் அதிகம் பாதிக்கப்படக்கூடியவையாகவே உள்ளன, இந்த நிறுவனங்களை திறம்பட ஒழுங்குபடுத்தவோ அல்லது கண்காணிக்கவோ எந்த அதிகாரப்பூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நன்கு ஒழுங்குபடுத்தப்படும்போது, பாரம்பரிய வங்கிச் சேவைகளிலிருந்து விலக்கப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட நபர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்குவதில் நுண்நிதி ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. தனிநபர்களை மேம்படுத்துதல், சேமிப்பை மேம்படுத்துதல் மற்றும் நிதி உறுதிப்பாட்டை எளிதாக்குதல் என்பவற்றில் நுண்நிதி பெரும் பங்காற்ற முடியும். இலங்கையில் முறைசாரா நுண்நிதியின் நீண்ட வரலாறு உள்ளது, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து 'சீட்டு' போன்ற பாரம்பரிய சேமிப்பு முறைகள் உள்ளன. காலப்போக்கில், இந்தத் துறை உரிமம் பெற்ற வங்கிகள், நிதி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் (NGO) ஆகியவற்றின் பல்வேறு வலையமைப்பாக பரிணமித்துள்ளது.

இருப்பினும், பல நுண்நிதி வழங்குநர்கள் ஒழுங்குபடுத்தப்படாமல் இருந்தனர், இது அதிக வட்டி விகிதங்கள், நெறிமுறையற்ற மீட்பு முறைகள் மற்றும் நிதி உறுதியற்ற தன்மை குறித்த கவலைகளுக்கு வழிவகுத்தது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க, தொழில்துறையை ஒழுங்குபடுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் எண் நுண்நிதிச் சட்டம் இயற்றப்பட்டது, வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்து குறைந்த வருமானம் கொண்ட கடன் வாங்குபவர்களைப் பாதுகாக்கிறது. இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற நுண்நிதி நிறுவனங்களை மட்டுமே மேற்பார்வையிடுகிறது, அதே நேரத்தில் மற்ற நிறுவனங்கள் வெவ்வேறு ஒழுங்குமுறை அமைப்புகளின் கீழ் செயல்படுகின்றன.

2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் எண் நுண்நிதிச் சட்டத்தின் கீழ் இலங்கையில் நான்கு உரிமம் பெற்ற நுண்நிதி நிறுவனங்கள் (ஸினிய்ளீவி) மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் குறைந்த வருமானம் கொண்ட தனிநபர்கள் மற்றும் நுண் தொழில்முனைவோருக்கு நுண்கடன்கள், சேமிப்பு மற்றும் பிற நிதி உதவி போன்ற நிதி சேவைகளை வழங்குவதற்கும், நிதி உள்ளடக்கம் மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பை ஊக்குவிப்பதற்கும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையில், மொத்தம் 46 நிறுவனங்கள் லங்கா நுண்நிதி பயிற்சியாளர்கள் சங்கத்தில் (LMPA) பதிவு செய்யப்பட்டுள்ளன. தேசிய குடிமக்கள் கணக்கெடுப்பிலிருந்து ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் தரவுகளின்படி, 3.8% குடும்பங்கள் நுண்நிதி நிறுவனங்களை நாடுகின்றன, அதே நேரத்தில் 11.2% குடும்பங்கள் நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களை நாடுகின்றன. நுண்நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கும் குடும்பங்களில், 52.2% பேர் பொருளாதார நடவடிக்கைகளுக்காக நிதி தேடுகிறார்கள், மேலும் 21.3% பேர் அடிப்படை நுகர்வுத் தேவைகளுக்காக அவ்வாறு செய்கிறார்கள்.

இதேபோல், நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கும் குடும்பங்களில் 17.6% குடும்பங்கள் அடிப்படை வீட்டு நுகர்வுக்கு நிதியைப் பயன்படுத்துகின்றன. 'தோராயமாக 15,000 நுண்நிதி நிறுவனங்கள் இலங்கையில் சட்டவிரோதமாக செயல்படுவதாக நம்பப்படுகிறது, இது தற்போதுள்ள ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பின் செயல்திறன் குறித்து கேள்விகளை எழுப்புகிறது,' என்று ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அறிக்கை கூறியது.

இந்த நிறுவனங்களின் முதன்மை இலக்குகள் தாய்மார்கள், ஏனெனில் அவர்கள் கிராமப்புறங்களில் இலகுவாக வசீகரிக்கப்படக்கூடியவர்கள். இந்தப் பாதிக்கப்பட்டவர்களில் பலர் அவர்களுக்குத் தெரியாமல் கடன் சுழற்சிகளில் விழுகிறார்கள். நிதி மற்றும் கல்வி அறிவு மிகவும் குறைவாக உள்ளவர்களே பொரும்பாலும் இந்தச் சுழலுக்குள் அகப்பட்டுக்கொள்கிறார்கள். மேலும் இந்த நிறுவனங்கள் விவரங்களை ஆங்கிலத்தில் கொடுத்தே கடன் விண்ணப்பப் படிவங்களை நிரப்புகின்றன. இந்த பெண்களில் பெரும்பாலோருக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது, எனவே அவர்கள் என்ன கையெழுத்திடுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. இறுதியில், இந்த வழக்குகள் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படும்போது, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து கையொப்பமிடப்பட்ட ஒப்புதல் படிவங்களுடன் நிதி நிறவனங்கள் தமது தரப்பை நியாயப்படுத்துகின்றன. இதுவே நுண்நிதி கடன் பொறியின் சாராம்சம்,

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் ஒரு சிவில் சமூக அமைப்பின் கூற்றுப்படி, பலர் தங்கள் குடும்பங்களுக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்ற அச்சத்தின் காரணமாக, அவர்கள் முதலில் கடன் வாங்கியதைவிட அல்லது ஆரம்ப ஒப்பந்தங்களில் வாக்குறுதியளிக்கப்பட்டதைவிட அதிகமாக திருப்பிச் செலுத்துகின்றனர்.

மக்களை வறுமையிலிருந்து விடுவிப்பதற்கும், நீதியான மற்றும் சுதந்திரமான சமூகத்தை உறுதி செய்வதற்கும் ஆளும்தரப்பின் வாக்குறுதியையும் கருத்தில் கொண்டும், நமது சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளை வேட்டையாடும் இந்த துயரத்தை நிவர்த்தி செய்வது ஆளும்தரப்பு முதன்மையான முன்னுரிமை வழங்கவேண்டும்.




## தாய்வானை சூழும் சீன ஆக்கிரமிப்பு: அமெரிக்காவின் பிராந்திய ஆதிக்கம்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

சீன அரசு மீண்டும் தாய்வானைச் சுற்றி கடந்த வாரம் பாரிய போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. தாய்வான் சுதந்திர நாடாகி, தேசிய சுயநிர்ணயம் பெறவும் நீண்ட காலமாக முயற்சியும் செய்து வருகிறது.

இன்றைய உலகில் நடக்கும் நிகழ்வுகளால் சீன அரசின் செயற்பாட்டை எவராலும் இலகுவாக கணிக்க முடியாமல் உள்ளது. அமெரிக்காவின் பிராந்திய நலன்களைப் பேணவும், சீனாவின் ஒற்றையாட்சி அச்சுறுத்தல்களாலும் தாய்வான் மீதான பாரிய அழுத்தங்களாக உள்ளன.



### தனிநாடாக பிரிந்த தாய்வான் :

சீனாவிலிருந்து தனிநாடாக பிரிந்து சென்ற தங்கள் நாட்டின் மீது படையெடுக்க, எல்லையில் படைகளை குவித்து போர் பயிற்சியில் ஈடுபட சீனா தயாராகி வருவதாக தாய்வான் இராணுவம் மீண்டும் குற்றம்சாட்டியுள்ளது.

சீனாவின் கிழக்கு மற்றும் தெற்கு கரையோரப் பகுதிகளில் பயிற்சிகளை நடத்துவதாகக் கூறி சீனா படைகளை நிலைநிறுத்தலாம். மேலும் தாய்வானை சுற்றி வளைக்கும் நோக்கில் மேற்கு பசிபிக் பகுதிக்கும் சீனா போர்க்கப்பல்களை அனுப்ப வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வானை மீண்டும் தன்னுடன் இணைக்க சீனா திட்டமிடுகின்றது. இதற்காக தாய்வான் அருகே அடிக்கடி போர்ப்பயிற்சி மற்றும் தாய்வான் எல்லைக்குள் போர் விமானங்களை அனுப்பி சீனா பதற்றத்தை தூண்டியும் வருகிறது.

இந்நிலையில் தாய்வான் எல்லைப் பகுதியில் சீனாவின் அத்துமீறல் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் குற்றஞ்சாட்டி உள்ளது.

தாய்வானை அச்சுறுத்தும் வகையிலும், தாய்வானைச் சுற்றியும் பாதுகாப்பு பயிற்சிகளை மேற்கொள்ளும் வகையிலும் தனது இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையை சீனா அனுப்பியுள்ளது.

இந்த பயிற்சியில் சீன கடற்படைக்கு சொந்தமான போர் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன

### அரை நூற்றாண்டு பகை:

சீனா-தாய்வான் இடையே அரை நூற்றாண்டுக்கும் மேலாக மோதல் போக்கு நீடிக்கிறது.

பெரும்பாலான உலக நாடுகளின் அங்கீகாரம் இல்லாதபோதிலும், தாய்வான் தன்னை தன்னாட்சி பெற்ற தனிநாடு என்கிறது, ஆனால் சீனாவோ தாய்வானில் அமைந்திருக்கும் அரசு, சட்டவிரோதமானது, தாய்வான் சீனாவிலிருந்து பிரிந்த ஒரு மாகாணப்பகுதி என்கிறது.

அவசியம் ஏற்பட்டால் தாய்வானை கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்தவும் தயங்க மாட்டோம் என தொடர்ந்து சீனா மிரட்டி வருகிறது. இந்த சூழலில் கடந்த சில வாரங்களாக சீனா-தாய்வான் இடையிலான ராணுவ பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.




### தனிநாடக பிரிவினை :

சீனாவில், 1911-ம் ஆண்டு மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, சீனதேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. 1927-ல் ஆளுங்கட்சிக்கு எதிராகச் சீன கம்யூனிஸ்ட் கட்சிப் போர்க்கொடி தூக்க, 1930-களில் உள்நாட்டுப் போர் வெடித்தது. 1949 வரை நடந்த இந்துப் போரில் தோல்வியுற்ற சீனதேசியக்கட்சியினர், தென் சீனக் கடலில் அமைந்திருக்கும் தீவான தாய்வானில் தஞ்சமடைந்தனர். இதையடுத்து சீனாவிலிருந்து பிரிந்து தனித்தீவு நாடாகச் செயல்படத் தொடங்கியது தாய்வான்.

1975 வரை சீன தேசியக் கட்சியின் தலைவரான சியாங்கின் ஆட்சியிலிருந்த தாய்வான், அதன் பிறகு மெல்ல மெல்ல


தொடர்ச்சி 5ம் பக்கம்...........

## தாய்வானை...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

ஜனநாயகத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. நீண்டகாலமாகவே தாய்வானைச் சொந்தம் கொண்டாடிய சீனா, 1981-ல் ஸ‘ஒரு நாடு-இரண்டு அமைப்புகள்’ என்ற ஆட்சிமுறைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.


இந்தத் திட்டத்தின்படி, ‘எங்களுடன் தாய்வான் இணைந்து கொண்டால், ஹாங்காங்கில் இருப்பதுபோல உங்களுக்கும் தன்னாட்சி அதிகாரம் வழங்குகிறோம்’ என்று சீனா ஆசைகாட்ட, அதை மறுத்துவிட்டது தாய்வான்




### சீனா படையெடுக்க சாத்தியமா ?

தொழில்துறை, தொழில்நுட்பத்துறைகளில் அசுர வளர்ச்சி பெற்று தாய்வான் பொருளாதாரத்தில் வேகமாக முன்னேறத் தொடங்கியது. இதைக் கண்டு அஞ்சிய சீனா, தாய்வானில் இருப்பது சட்டவிரோதமான ஆட்சி. அது தனிநாடு அல்ல, எங்களிடமிருந்து பிரிந்த மாகாணம் மட்டுமே’ என்று சொல்லிவந்தது.

2005-ல் தாய்வானைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பிரிவினைவாத தடுப்புச் சட்டத்தையும் கொண்டுவந்தது சீனா. அதன் பிறகு, இரண்டு நாடுகளுக்கும் இடையேயான மோதல் உச்சம் தொட்டது. 2013-ல் சீன அதிபரான ஜி ஜின்பிங், தாய்வானைச்சீனாவின்கட்டுக்குள்கொண்டுவருவதில் தீவிரம் காட்டினார்.




அதைத் தொடர்ந்து, 2016-ல் தாய்வான் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த சட்டங்களைக் கொண்டுவந்து, பாதுகாப்புத் துறையையும் மேம்படுத்தியது. வெளிநாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தத் தொடங்கியது.

அமெரிக்கவுடன் நீண்டகால நட்புறவை ஏற்படுத்திக்கொண்டதால், தாய்வானுக்குப் பல நவீன ஆயுதங்கள் கிடைத்தன. சர்வதேச ரீதியில் வத்திக்கானும், வேறு 13 நாடுகளும் தாய்வானை இறையாண்மைகொண்ட நாடாக அங்கீகரித்திருக்கின்றன.

சீனா, மீண்டும் தாய்வானை தன்னில் இணைத்துக்கொண்டு விட்டால், அது பசிபிக் பிராந்தியத்தில் தனது அதிகாரத்தைச் சுதந்திரமாகக் காட்ட வழிவகுப்பதுடன், குவாம் மற்றும் ஹவாய் வரையிலான அமெரிக்க இராணுவ தளங்களுக்கு அது அச்சுறுத்தலாகவும் அமையும்.

ஆனால் தாய்வானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவுக்கரம் நீட்டி வருவதும், சீனாவின் எதிர்ப்பைப் புறந்தள்ளி வருகிறது.



# மாற்றத்தை மக்கள் விரும்புவதால் அக்கரைப்பற்று எங்கள் வசமாகும்

## மயில் வேட்பாளர் ஐயூப் உறுதி

(நூருல் ஹுதா உமர்)

கடந்த காலங்களில் தேசிய காங்கிரஸ் போராளிகளாக இருந்து கட்சிக்கு உரமூட்டிய எங்களை பலிகொடுத்து எங்களின் ஊர்களுக்கு தேசிய காங்கிரஸ் தலைமையால் வழங்கப்பட்ட எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படாததால் மக்கள் இம்முறை தேசிய காங்கிரஸை நிராகரிக்க முடிவெடுத்துள்ளார்கள். அதனால் இசங்கணிச்சீமையில் ஒரு வேட்பாளரே கிடைக்காத நிலை அவர்களுக்கு உருவாகியுள்ளது. தேசிய காங்கிரஸ் வேட்பாளராக இசங்கனிசீமை வட்டாரத்தில் போட்டியிட வெளி வட்டாரத்தில் இருக்கும் ஒருவரை நிறுத்தியுள்ளார்கள். இவர்களுக்கு வாக்களிக்க இசங்கனிசீமை வட்டாரத்தில் யாரும் தயாராக இல்லை என அக்கரைப்பற்று பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முதன்மை வேட்பாளருமான ரீ.எம். ஐயூப் தெரிவித்தார்.



ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் -

கடந்த காலங்களில் தேசிய காங்கிரஸ் தலைமையால் அக்கரைப்பற்று பிரதேச சபை பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. அதிலும் குறிப்பாக இசங்கணிச்சீமை வட்டார மக்களை முழுமையாக ஏமாற்றினார்.

இசங்கணிச்சீமை மாணவர்களின் கல்வி மேம்பாட்டு விடயங்களிலும், பள்ளிவாசல் காணி விடயங்களிலும் போலியான வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றினார். அதுபோன்றே மக்களுக்கு போலியான விளம்பரங்களை செய்தார்களே தவிர உருப்படியாக எதுவும் செய்தபாடில்லை. கடந்த காலங்களில் அக்கரைப்பற்று பிரதேச சபையில் நடைபெற்ற சில்லறை விளையாட்டுக்களை மக்கள் இனியும் அனுமதிக்க மாட்டார்கள். மக்கள் இவர்களின் போலி முகங்கள் பற்றி தெளிவாக இருக்கிறார்கள்.

இம்முறை முஸ்லிங்களின் ஏகோபித்த தலைமையாக உருவெடுத்துள்ள முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் எம்.பி அவர்களின் கரங்களை பலப்படுத்தி எங்களின் வேட்பாளர்கள் மீது மக்களுக்கு இருக்கும் அதீத நம்பிக்கையின் காரணமாக அக்கரைப்பற்று பிரதேசசபையை மயில் அணியிடம் வழங்க மக்கள் முடிவெடுத்துள்ளார். இம்முறை மாற்றத்தை மக்கள் விரும்புவதால் அக்கரைப்பற்று பிரதேச சபை எங்கள் வசமாகும். நாங்கள் மக்கள் விரும்பும் ஆட்சியை முன்னெடுப்போம். - என்றார்.

# துன்னாலையில் 120 லீற்றர் கசிப்பு மீட்பு

(சுபேசன்)

பருத்தித்துறை துன்னாலை - வேம்படிப் பகுதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 120லீற்றர் கசிப்பினை வெள்ளிக்கிழமை மதுவரித் திணைக்களத்தினர் மீட்டுள்ளனர்.

கடந்த 5 வருடங்களாக இயங்கி வந்த கசிப்பு விற்பனை நிலையம் ஒன்றே சங்கானை, சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரின் கூட்டு நடவடிக்கை மூலம் சுற்றிவளைக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது மூன்று சந்தேக நபர்கள் தப்பித்துச் சென்றுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை மதுவரித் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

யாழ் மாவட்ட மதுவரி ஆணையாளர் எஸ்.ரஞ்சன், மதுவரி அத்தியட்சகர் ரணவீர ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் பருத்தித்துறை மதுவரிப் பொறுப்பதிகாரி வி.ரஷிகரன் தலைமையிலான குழுவினர் மேற்படி மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கஞ்சாவுடன் இளைஞன் திருமலையில் கைது

திருகோணமலை - சீனக்குடா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மீன்பிடி துறைமுகத்திற்கு அருகில் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் திருகோணமலை முகாமிற்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து 500 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து, கைதானவர் சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டமாவடியில் விபத்து ; தாயும், மகனும் காயம்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி பிரதான வீதியில் சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் இளம் தாயும் ஏழு வயது மகனும் காயமடைந்துள்ளனர்.

பஸ்ஸில் பயணித்த இருவரும் பஸ்ஸில் இருந்து இறங்கி வீதியைக் கடக்கும் போது மோட்டார் சைக்கிளில் மோதியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த தாயும், மகனும் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்பு உற்பத்தி நிலையம் தர்மபுரத்தில் முற்றுகை

கிளிநொச்சி தர்மபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் வெள்ளிக்கிழமை தர்மபுர பொலீஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 2970 போத்தல் கோடாவினை பொலீஸார் பறிமுதல் செய்ததுள்ளதுடன் இச்சம்பவத்தின் தொடர்புடைய சந்தேக நபர் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச்சென்ற சந்தேக நபரை கைது செய்யும் நடவடிக்கையில் தர்மபுரம் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். 316



# திருவிழா

சுன்னாகம் தாளையடி ஸ்ரீஹரிகரபுத்திர ஐயனார் ஆலய குரோதி வருட மகோற்சவ விஞ்ஞாபனத்தின் இரட்டை அஸ்வாரூட காட்சி உற்சவம் 5 ஆம் நாள் மாலை திருவிழா சனிக்கிழமை நிகழ்வில் பண்டிதர் சைவப்புலவர் செஞ்சொல்வேந்தர் செ.த.குமரன் அவர்கள் 'ஆலயமும் மனித வழிபாடும்' என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவும் நேர்முகவர்ணணையும் நிகழ்த்தினார்.

# தேசிய காங்கிரஸ் கட்சி மூதூர் பிரதேச வேட்பாளர்களுடன் கலந்துரையாடல்

(முஹம்மது ஜிப்ரான்)

மூதூர் பிரதேசசபை தேர்தலுக்கான தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிடும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கான கூட்டமானது கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் பங்கேற்புடன் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மூதூர் தேசிய காங்கிரஸ் அமைப்பாளர் டாக்டர் சியா மற்றும் தேசிய காங்கிரஸின் மத்திய குழு தலைவர் நிஹார் மற்றும் வேட்பாளர்கள் அத்துடன் பொதுமக்களும் கலந்து சிறப்பித்து இருந்தனர்.

இந்நிகழ்வின் போதும் வேட்பாளர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதோடு இன்னும் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.





# சாய்ந்தமருது அல்–ஜலாலின் நோன்புப் பெருநாள் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

நோன்புப் பெருநாளைத் தொடர்ந்து பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு வருடாந்தம் நடைபெறும் சாய்ந்தமருது கமு/கமு/ அல்- ஜலால் வித்தியாலய நோன்புப் பெருநாள் நிகழ்வு பாடசாலை அதிபர் ட.கே.எம். சிராஜ் தலைமையில் பாடசாலை கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

பாடசாலை பணியாட்குழுவினரின் முழுமையான பங்களிப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் நோன்புப் பெருநாளைச் சிறப்பிக்கும் முகமாக வீடுகளில் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டங்கள் மற்றும் பலகாரங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு அதிதிகள் மற்றும் பணிக்குழுவினருக்கான விருந்தோம்பல் நிகழ்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமின் ஆலோசணையின் பேரில் கல்விப் பணிமனையின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி என். வரணியா அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், விசேட அதிதிகளாக கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.என்.ஏ.மலீக், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.அஸ்மா மலீக், நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பாடசாலையின் ஆசிரியர் ரவீந்திரகுமார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

மேலும் பாடசாலை பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டுப்பயிற்றுவிப்பாளர் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.







# தமிழ்க் காங்கிரஸின் சாவகச்சேரி வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு

(சுபேசன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினுடைய சாவகச்சேரித் தொகுதி வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி கலை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் வி.விஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் ,ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபாலன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தகர்கள் மற்றும் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை வட்டாரங்களில் போட்டியிடுகின்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வானது சாவகச்சேரி சிவன் ஆலய வழிபாடு மற்றும் அதனைத் தொடர்ந்து மூன்று மாவீரர்களுடைய தாயாரின் ஈகைச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மகன் தாக்கி தாய் உயிரிழப்பு வாழைச்சேனையில் சம்பவம்

(பர்ஸான்)

பெண்ணொருவர் தனது வீட்டு வளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி - கேணிநகர் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

யாசகம் பெற்று வாழ்ந்து வரும் 65 வயது மதிக்கத்தக்க தாய் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது தாயுடன் வாழ்ந்து வந்த 46 வயதுடைய மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தாக்கி குறித்த தாய் மரணமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் சந்தேகத்தில் மகனை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







காலைக்கதிர் Kalaikkathir

## ஜி.எஸ்.பி. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய பிரதமருடன் தற்போது பேச வேண்டிய மிக முக்கிய காரணி 'எக்டா'வாகும். பொருளாதார ரீதியில் எவ்வாறு இணைந்து செயற்படுவது, தென்னிந்திய 5 மாநிலங்களின் தீவிர அபிவிருத்தியிலிருந்து எவ்வாறு பயன் பெறுவது என்பது குறித்து கலந்தாலோசிக்கவேண்டும். ஜி.எஸ்.பி. பிளஸ் இருப்பதால் அமெரிக்க வரி அதிகரிப்பினால் சிக்கல் இல்லை என்று சிலர் கூறுகின்றனர்.

இவ்வாண்டுடன் ஜி.எஸ்.பி. பிளஸ் நிறைவடையப் போகிறது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பான புதிய முன்மொழிவுகள் முன்வைக்கப்படவுள்ளன. எனவே புதிய சட்டத்துடன்புதியஜி.எஸ்.பி. பிளஸ்வரவுள்ளது. அதற்கமைய தற்போது ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைக்கப் பெறும் சுமார் 6 நாடுகள் அதனை இழக்க நேரிடும்.

பயங்கரவாத தடைச்சட்டம், நல்லிணக்கம் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பில் இலங்கை என்ன செய்திருக்கிறது என்பதையும் ஐரோப்பிய ஒன்றியம் ஆராயும். இன்னும் இரு வாரங்களில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு இலங்கை வரவுள்ளது. வந்ததன் பின்னர் நிச்சயம் இவை தொடர்பில் ஆளும்தரப்பு தெளிவுபடுத்தவேண்டும்.

அமெரிக்காவினால் கதவுகள் அடைக்கப்படும் போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் கதவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையை மீளப் பெற்றுக்கொள்வதற்கு எந்தளவுக்கு இலங்கை போராடியது என்பதை என்னைத் தவிர இந்த நாடாளுமன்றத்தில் யாருக்கும் தெரியாது. எனவே இவை தொடர்பில் ஆளும்தரப்பு தீர்க்கமாக சிந்தித்து செயற்பட வேண்டும் என்றார்.

## தபால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுமுதல் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

உள்ளூராட்சிமன்றத்தேர்தலின்தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23, மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்களுக்கு ஏப்ரல் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

## அ'புர மகா

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து வழிபாடுகளை மேற்கொண்டிருந்தேன். பௌத்தமதத்தின் அதி சிறப்புமிக்கதும் மதிப்புக்குரியதுமான ஸ்தலங்களில் ஒன்றான இத்தலத்தில் வழிபாட்டினைமேற்கொள்வதுஉண்மையில் மிகவும் பணிவுக்குரிய தருணமாகும். அமைதி, ஞானம் மற்றும் ஆன்மீக நீட்சியின் வாழும் குறியீடாக இத்தலம் திகழ்கின்றது. புத்தபெருமானின் போதனைகள் எப்போதும் எமக்குவழிகாட்டட்டும்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தான் பிறந்த குஜராத் பிரதேசத்தில் 1960ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது புத்தரின் நினைவுச்சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டதாகவும், அந்த நினைவுச் சின்னங் களை இலங்கையில் காட்சிப்படுத் துவதற்கான வாய்ப்பை வழங்குவது குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதாகவும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

அட்டமஸ்தானாதிபதி தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர், பிரித் பாராயணம் செய்து இந்தியப் பிரதமரை ஆசிர்வதித்தனர். அங்கு வைக்கப்பட்டிருந்த சிறப்பு விருந்தினர்கள் புத்தகத்தில் பிரதமர் நரேந்திர மோடி நினைவுக் குறிப்பையும் இட்டார். மேலும், இந்தியப்பிரதமர் ஜயஸ்ரீ மகா போதி வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயிலையும் திறந்து வைத்தார்.

ருவன்வெலி சேய விகாராதிபதி வண, ஈத்தலவெடுனுவேவே ஞானதிலக தேரர், உட்பட அட்டமஸ்தான விஹாரையின் விகாராதிபதி, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அமெரிக்காவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் தொடர்புடைய வரிக் கொள்கை பொருந்தும் என்று அமைச்சர் விளக்கினார்.

அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக் கொள்கை மற்றும் அதன் விளைவாக நாட்டைப் பாதித்த பிரச்சினைகள் குறித்து, இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஆளும்தரப்பு ஒரு தீர்வைக் கோரியதாகவும், அதற்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 சதவீத வரி விதிக்க முடிவு செய்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வியாழக்கிழமை அறிவித்திருந்தார்.

## தம்புள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளார்.

இந்த களஞ்சியத் திறப்பு விழா நாட்டிற்குக் கிடைத்த வெற்றி என்றும், இந்தத் திறப்பு விழா குறித்து தாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்த களஞ்சியத்தை முன்னோக்கி எடுத்துச் செல்ல ஒரு விரிவான வணிகத் திட்டத்தையும் நாங்கள் உருவாக்கினோம். 'நல்லாட்சி'யின் தோற்கடிக்கப்பட்டதால் இந்த திட்டத்தை எங்களால் முடிக்க முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பின்னர், ஆட்சிக்கு வந்தவர்களுக்கு இங்கே வேலையை முடிக்க உண்மையான விருப்பம் இல்லை. நாங்கள் உருவாக்கிய வணிகத் திட்டத்திலிருந்து இந்த ஆளும்தரப்பு பயனடையும்என்றும்நம்பிக்கைவெளியிட்டார்.

தேவைப்படும்போது விவசாயிகளின் காய்கறி மற்றும் பழ அறுவடைகளை சேமித்து நிர்வகிக்க, 5,000 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட நாட்டின் முதல் வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் கட்டுப்பாட்டு விவசாய சேமிப்பு வளாகமாக இதை தாங்கள் தொடங்கியதாகவும் குறிப்பிட்டார்.

இந்தத்திட்டத்தைத்தொடர்ந்து, 'பிரபாஸ்வர' திட்டத்தின் மூலம் மத்திய மாகாணத்தை உள்ளடக்கிய கெப்பட்டிபொலவிலும், வடக்கு மாகாணத்தை உள்ளடக்கிய யாழ்ப்பாணத்திலும், தென் மாகாணத்தை உள்ளடக்கிய எம்பிலிப்பிட்டியவிலும் இதேபோன்ற விவசாய சேமிப்பு வளாகங் களை நிர்மாணிக்க நாங்கள் திட்டமிட்டிருந்தோம். எனவே, அவற்றை செய்து முடிக்கும் ஆற்றல் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு கிடைக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஆழ்கடலில் மீன்பிடி படகுடன் போதைப் பொருளும் சிக்கியது

கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, போதைப்பொருள் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் நீண்ட நாள் மீன்பிடி படகுடன் ஏழு சந்தேகநபர்கள் ஆழ்கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்கள் கைப்பற் றப்பட்ட குறித்த நீண்ட நாள் மீன்பிடி படகு திக்கோவிட்ட துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டது. பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் நிபுணத்துவ அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட மேலதிக சோதனையின் போது மிக நுணுக்கமாக மறைத்து நாட்டிற்கு கொண்டு வர முயற்சித்த 191 கிலோ 752 கிராம் ஹெரோயின் மற்றும் 671 கிலோ 452 கிராம் ஐஸ் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருள், சந்தேக நபர்கள் மற்றும் மீன்பிடி படகு ஆகியவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

கடற்படைத் தளபதியினால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திக்கோவிட்ட துறைமுகத்தில் போதைப்பொருட்களைப் பார்வை யிட்ட பின்னர், இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக முடிப்பதற்கு பங்களித்த அனைத்து கடற்படையினருக்கும் கடற்படைத்தளபதி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

# போதைப் பொருளுடன் இந்தியப் பெண் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொக்கைன் போதைப்பொருளுடன் இந்தியப் பெண்ணொருவர் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட் டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இந்தியாவின் மிசோராம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய பெண் ஆவார்.

முதற்கட்ட விசாரணையில் அவரது கடவுச் சீட்டை பரிசோதனைக் குட்படுத்தியதில், அவர் இதற்கு முன்பு மூன்று முறை நாட்டிற்கு வருகை தந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

நேற்றையதினம் 02.14 மணியளவில், அவர் இந்தியாவின் சென்னையிலிருந்து 6சி-1171 என்ற இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

தனது பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 6 கோடியே 57 இலட்சத்து 66 ஆயிரம் பெறுமதியுடைய 01 கிலோ 644 கிராம் கொக்கைன் போதைப்பொருள் விமான நிலைய பொலிஸாரினால் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்று 01.30 மணியளவில், கைது செய்யப்பட்ட பெண் அளித்த தகவலின் அடிப்படையில், கொழும்பு - கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு அருகில் தங்கியிருந்து போதைப்பொருட்களை பெற்றுக்கொள்ள தயாராக இருந்த இலங்கை போதைப்பொருள் கடத்தல் காரரும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மாலபே பகுதியைச் சேர்ந்த 50 வயது டைய தொழிலதிபர் எனத் தெரியவந் துள்ளது. மேலும், கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் இன்றை யதினம் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள் ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். பல்கலை புதுமுக மாணவன் மீது தாக்குதல் சிரேஷ்ட மாணவர்கள் இருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்டு சித்திரவதை புரிந்த குற்றச்சாட்டில் சிரேஷ்ட மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டு , நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி பல்கலைக்கழக விடுதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு நடந்து வந்து கொண்டிருந்த புதுமுக மாணவனை விரிவுரைக்குச் செல்லவிடாமல் தடுத்த சிரேஷ்ட மாணவர்கள் சிலர், அவரை வலுக்கட்டாயமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றி, தனியார் மாணவ விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு வைத்து அம்மாணவனையும் வேறு சில புதுமுக மாணவர்களையும் கடுமையான சித்திரவதைக ளுக்குள்ளாக்கிய சிரேஷ்ட மாணவர்கள், தலைக்கவசத்தாலும் தாக்கியுள்ளனர்.

தாக்குதல் மற்றும் சித்திரவதைக்கு உள்ளான நாத்தாண்டிய பகுதியை சேர்ந்த மாணவன் ஒரு காது கேட்கும்திறனை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மாணவனால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இரு சிரேஷ்ட மாணவர்களைக் கைது செய்து விசாரணைகளின் பின்னர் யாழ் . நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து இரு மாணவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மாணவர்கள் தொடர்பிலும் தாம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் , தலைமறைவாகவுள்ள அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
Premium Lands with 100% Legal Security
8 இலட்சம் முதல்
* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.
விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!
முல்லை
எழுதுமட்டுவாழ்
மருதம்
கிழக்கு அரியாலை
குறிஞ்சி
மலையகம்
(ஹப்புத்தளை நகர்)
நெய்தல்
மட்டக்களப்பு
(வாவிக் கரையோரம்)
ஏப்ரல் 14th திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு
இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!
இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!
இனிமையான வாழ்விற்கு..!
GOOD GIFT
PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
+94 77 743 5557

காலைக்கதிர் Kalaikkathir

# பூநகரிப் பிரதேச சபைக்குப் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பு

பூநகரி பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தலைமையில் பூநகரி வெட்டுக்காடு பகுதியில் மக்கள் சந்திப்பு நடைபெற்றது.

அங்கு அவர் உரையாற்றிருந்தார்.

இரண்டு கட்சிகள் தான் இதுவரை நாட்டில் ஆட்சி செய்து வந்தனர். முதலாளித்துவ கட்சிகளே இவை தேசிய மக்கள் சக்தி அவ்வாறு இல்லை. ஜனாதிபதி அனுரகுமார சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவர்.

ஆட்சிக்கு வந்து நான்கு மாதத்தில் அஸ்வெசும அதிகரித்துள்ளோம், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு பணம் வழங்கியுள்ளோம்.

வடக்கில் அதிக தொழிற்;சாலைகளை



ஆரம்பிக்கவுள்ளோம்.

நாடாளுமன்ற தேர்தலில் அதிகளவு வாக்குகளை இந்த பகுதி மக்கள் பெற்று தந்திருக்கிறார்கள். அதே போல் கிராமத்தில் தேசியமக்கள்சக்தியின் ஆதரவைகாட்டுவதற்கு உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் மக்கள் ஆதரவைத்தரவேண்டும். - என்றார். 316

# தொழில் மைய கற்கைக்கு வழிகாட்டும் கருத்தரங்கு

வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் கல்வியமைச்சின் அனுமதியுடன், க.பொ.த. உயர்தரத்தில் கலைத்துறையில் கல்வி கற்கும் மாணவர்கள் தொழில்மையமாக தமது கல்வியைத் தொடர்வதற்கு வழிகாட்டும் கருத்தரங்கு ஒன்று ஞாயிற்றுக்கிழமை

காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது.

சிகரம் நிறுவனத்தின் கலைத்துறை கல்லூரியின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கில் 2027, 26 மற்றும் 25 ஆம் ஆண்டில் கலைத்துறைக் கல்வியைத் தொடரும் க.பொ.த. உயர்தர மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இந்தக் கருத்தரங்கின் வளவாளர்களாக பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன்ரூபவ் நெல்லியடி மகாவித்தியாலய முன்னாள் அதிபர் கலாநிதி செ.சேதுராஜா, யாழ் பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட உதவிப்

பதிவாளர் இ.கிருஷ்ணகுமார், யாழ் பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சு.ஜீவசுதன், தொழில் வழிகாட்டல் ஆலோசகரும், தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளருமான ஸ்ரீபவன் ஆகியோர் கலந்துகொண்டதாக சிகரம்கலைத்துறைக் கல்லூரியின் நிறுவுநரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான கோ.றுஷாங்கன் தெரிவித்தார்.

'கல்விப் பயணத்தை ஆரம்பிக்க முன்னர் தொழில் இலக்கைத் தீரமானியுங்கள்' என்கின்ற மகிட வாக்கியத்துடன் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில், க.பொ.த.

உயர்தரத்தில் கலைத்துறையில் கல்வி கற்கும் மாணவர்கள் தொழில்வாய்ப்புக்களுக்கு

ஏற்றவிதமாக பொருத்தமான கலை - வர்த்தக பாடச் சேர்மானங்களைத் தெரிவுசெய்து

கல்வி கற்பதற்கான வழிகாட்டல் வழங்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு கல்வி- தொழில்சார் உளவியல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, பொருத்தமான

தொழில் துறைகளை நோக்கி அவர்கள் கற்றுத் தேறுவதற்கேற்ற வகையில் சிகரம் கலைத்துறைக் கல்லூரியால் நடத்தப்படவுள்ள க.பொ.த. உயர்தர கலைத்துறை

வகுப்புக்கள் தொடர்பான விபரங்களும், விசேட கட்டணக் கழிவுகளுடன் உடனடி அனுமதிகளும் வழங்கப்பட்டன.

# மருதமுனையில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பம்

(ஷினாஸ்)

மருதமுனை மசூர் மௌலானா மைதானம் மின்னொளி மைதானமாக அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர்,

மருதமுனை மருதம் விளையாட்டுக்கழகம் மற்றும் கல்பனா விளையாட்டுக் கழகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த மின்னொளியிலான உதைப்பந்தாட்ட போட்டி விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக முன்னாள் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ எச்.எம்.எம்.ஹரீஸ் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில், மருதமுனை மசூர் மௌலானா மைதானத்திற்கு நிரந்தர மின்னொளிக்கம்பங்களை பொருத்துவதற்கு கடந்த ஆட்சிக்காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்ததற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸுக்கு மருதமுனை விளையாட்டு சமூகம் நன்றி பாராட்டி கௌரவித்தனர்.

சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டியில் ஏறாவூர் வைஎஸ்எஸ்.சி. அணியும் மருதமுனை தெரிவு

அணியும் விளையாடின. இரு அணிகளும் எதுவித கோல்களையும் போடாமல் போட்டி சமநிலையில் நிறைவடைந்து.

இப்போட்டியில் கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் சிரேஸ்ட சட்டத்தரணி ஏ.எம் றக்கீப், அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயளாளர் வை.கே.றஹ்மான், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.எம் முஸ்தபா, சமட் ஹமீட், அம்பாறை மாவட்ட உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் செயலாளர் ஏ.எம் இப்றாஹிம், மருதம் விளையாட்டு கழகத்தின் சிரேஸ்ட ஆலோசகர் எம்.சமீம், பொறியியலாளர் எம்.எஸ்.பஸீல், மருதம் விளையாட்டுக்கழக செயலாளர் அசன் மனாஸ், பிரிலியண்ட் விளையாட்டுக் கழகத் தலைவர் எம்.எஸ்.எம் பழீல் விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள் விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





யாழில் இடுகாட்டை வாங்கிய தனியார்:

# தமது உறவுகளின் கல்லறைகளை பாதுகாக்கக் கோரும் உறவுகள்

யாழ்ப்பாணத்தில் இடுகாடு ஒன்றை தனியார் ஒருவர் கொள்வனவு செய்து, அதில் கட்டடங்களைக் கட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம் பகுதியில் உள்ள காணி ஒன்றை நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் இடுகாடாக பயன்படுத்தி வருகின்றனர்.

அங்கு சுமார் 150 இற்கும் மேற்பட்ட உடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் பல கல்லறைகளும் கட்டப்பட்டுள்ளன.

அத்துடன் அப்பகுதியில் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில், சிறுமியின் உடலம் நீதிமன்ற உத்தரவின் பேரில் குறித்த இடுகாட்டிலையே புதைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ளன.

இந்நிலையில் குறித்த இடுகாடு அமைந்துள்ள காணியை அண்மையில் தான் பணம் கொடுத்து வாங்கியுள்ளதாகவும் அது தனக்கு சொந்தமானது என கூறி, கல்லறைகளை அகற்றி விட்டு, அதில் சுற்றுலா மையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தனியார் ஒருவர் அப்பகுதி மக்களிடம் கூறியுள்ளார்.

இது தொடர்பில் பிரதேச செயலரிடம் தெரிவித்த நிலையில், குறித்த காணி தனியாருக்கு சொந்தமானது எனவும், இடுகாட்டுக்காக இனிவரும் மூளாய் பகுதியில் 2 ஏக்கர் காணியை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.




எமது உறவுகளின் கல்லறைகள் இந்த இடுகாட்டில் உள்ளன. அதனை ஒருவர் அழித்து அதன் மீது சுற்றுலா தளம் ஒன்றை அமைப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கில் முன்மொழிந்துள்ள 3 முதலீட்டு வலயங்களும் இந்த ஆண்டிற்குள்ளேயே ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பு

## இலங்கை முதலீட்டுச் சபை தெரிவிப்பு

அரசாங்கம் வடக்கில் முன்மொழிந்துள்ள 3 முதலீட்டு வலயங்களும் இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் இதன் ஊடாக 16,000 பேருக்கு தொழில்வாய்பை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் என இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், இலங்கை முதலீட்டுச் சபையினர் மற்றும் வடக்கின் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

மூன்றுதசாப்தகாலபோரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்துக்கு தற்போது அதிகளவு முதலீட்டாளர்கள் வருகைதருகின்றனர். அவர்களுக்கான ஒழுங்குகளைச் செய்துகொடுக்கின்றோம். அரசாங்கமும் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. இந்தக் காலத்திலேயே முதலீடுகளுக்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. எமது இளையோருக்கு வேலைவாய்ப்பு பிரச்சினையாகவுள்ளது.



தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் என்பன எமது அபிவிருத்திக்கு தடையாகவுள்ளன, என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் முதலீட்டுச் சபையின் தலைவர் தனது உரையில் -

இவ்வாறான கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தியமைக்காக ஆளுநருக்கு நன்றிகளைக் கூறுகின்றோம். முதலீடுகளை ஊக்குவிக்கும் அவரது முயற்சியை வரவேற்கின்றோம். எவ்வளவு விரைவாக வடக்கின் மூன்று முதலீட்டு வலயங்களுக்குமான பணிகளை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதனைச் செய்வதற்கே விரும்புகின்றோம். அடையாளப்படுத்தப்பட்ட மூன்று முதலீட்டு வலயங்களையும் நாங்கள் பார்வையிட்டுள்ளோம். - என்றார்.

காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய முதலீட்டு வலயத்துக்கான போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள் தொடர்பாக தனித்தனியாக விரிவாக ஆராயப்பட்டன. இதனை முன்னெடுப்பதிலுள்ள உடனடிச் சவால்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்கு தீர்வுகளும் கண்டறியப்பட்டன.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயங்கிய காலத்தில் அதற்கான புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை புனரமைத்து மீளமைப்பதுடன் அதனை காங்கேசன்துறை துறைமுகம் விரையில் விரிவாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

பரந்தனுக்கு அண்மையாக புகையிரத நிலையம், ஏ - 9 பிரதான வீதி உள்ளமை சாதகமாக அம்சம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் சில இடங்களில் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

மாங்குளத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி வனவளத் திணைக்களத்துக்குரியது என்பதால் 



அதனை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மூன்று முதலீட்டு வலயங்களைச் சுற்றியும் வேலிகளை அமைத்து அதனை அடையாளப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பது எனவும் முடிவுசெய்யப்பட்டது. மேலும் அமைக்கப்படவுள்ள முதலீட்டு வலயங்கள் சுற்றுச்சூழல் நேயமிக்கதாக அமையும் என முதலீட்டுச் சபையினர் குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற முதலீட்டாளர்கள், கடந்த காலங்களிலும் பல சந்திப்புக்கள் நடைபெற்றாலும் அடுத்த கட்டத்துக்கு அவை நகர்ந்திருக்கவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். அத்துடன் உள்ளூர் அதிகாரிகள் தமது முதலீட்டு முயற்சிக்கான போதிய ஒத்துழைப்புக்களை வழங்கமறுக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினர்.

தற்போது ஆரம்பித்துள்ள தமது முயற்சியில் இவ்வாறான கசப்பான சம்பவங்கள் நடைபெறாது என்றும், இந்த மூன்று முதலீட்டு வலயங்களும் நிச்சயம் இயங்கும் எனவும் முதலீட்டுச் சபையின் தலைவர் உறுதியளித்தார்.




காலைக்கதிர்
Kalaikkathir

# பொய்ப் பிரசாரர்களை கடாசிவிட்டு உங்கள் பிரதேசத்துக்கு உண்மை, நேர்மை, அர்ப்பணிப்புள்ளவர்களை தெரியுங்கள்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைப்பாட்டில் இருந்து மக்களை மீட்டுகின்ற ஒரு தேர்தலாக இந்த தேர்தலை மாற்ற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் தம்பலகாமம் பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான ஆலோசனை கூட்டம் தம்பலகாமம் பிரதேச ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச அமைப்பாளர் எச்தாலிப் அலியின் இல்லத்தில் சனிக்கிழமை மாலை இடம் பெற்றது இதில் கலந்து கொண்டு ஊடகத்துக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

அதே போன்று மக்களுக்கு சென்ற காலங்களில் அளித்தவாக்கைஅவர்கள்எதிர்பார்த்தஎதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றதா? என்ற கேள்வியை சுமந்தவர்களாக இந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு முகங்கொடுப்பவர்களாக மக்கள் இருக்கிறார்கள். குறிப்பாக இன்று இனவாதங்கள் பேசப்படுகின்ற சில விடயங்களை நாங்கள் பார்க்கின்றோம். அந்த அடிப்படையில் என்னென்ன விடயங்களை சொல்லி ஆட்சியை கைப்பற்றிய அரசாங்கம் அந்தந்த செயற்பாடுகளில் இருந்து மாற்றமாக நடந்து கொள்கின்ற நிலையை அவதானிக்க முடிகின்றது.

அந்தஅடிப்படையில்இன்றுபலவிடயங்கள்ஏமாற்று தனமாக காணப்படுகிறது. குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் ,முஸ்லீம் மக்களுடைய உறவை கூட விமர்சிக்கின்ற அல்லது விரிசலை ஏற்படுத்தும் அரசியல் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

ஆகையால் மக்கள் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். எதிர்பார்த்த மற்றும் சரியாக அமையாத காரணத்தினால் இந்த உள்ளூராட்சிமன்றத்தின் மூலமாக மீண்டும் ஒரு சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் அதே போன்று சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் என்பது அவர்களது எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.



உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கூட சில கட்சிகள் சில இனவாத செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள். அதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் தமிழ், சிங்கள, முஸ்லீம்கள் ஒற்றுமையோடு பயணிக்கின்ற சூழலை கட்சி ஏற்படுத்தியிருக்கிறது. அந்த அடிப்படையில் வருகின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தம்பலகாம பிரதேச சபை ஆட்சி அதிகாரத்தை பெரும்பான்மையாக கொண்டு கைப்பற்றும் கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி இருக்கும் என்பதை ஆனித்தரமாகக் கூறுகின்றேன். இந்த இனவாத செயற்பாடுகளுக்கு எதிராக அரசாங்கத்தை நம்பி வாக்களித்த தமிழ்,முஸ்லீம், சிங்கள இனவாதத்தை வெறுத்து ஆதரவளித்தவர்களுக்கு அரசாங்கம் இன்று பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

எனவே மீண்டும் ஒரு நல் உறவை ஏற்படுத்துவயற்காக உள்ளூராட்சி மன்ற தேர்தலை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன் பொய் பிரச்சாரத்திற்கு சந்தர்ப்பத்தை வழங்காமல் உங்கள் பிரதேச சபைகளில் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்கின்ற உறுப்பினர்களை உள்வாங்கி உண்மை, நேர்மை, நீதி, நியாயம் போன்றவற்றுடன் செயற்படும் உறுப்பினர்களை தெரிவு செய்யுங்கள். - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி07.04.2025இல் வெளியிடப்பெற்றது